பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் , சென்னை.6 அவர்களின் இணைச் செயல்முறைகள்

**ந.க.எண். 45456/எம்/இ1/2023, நாள்.04.10.2023**

பொருள்: பள்ளிக் கல்வித் துறை – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தூய்மை செயல்பாடுகள், சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம் மற்றும் சத்துணவுத் திட்டத்தினை செயல்படுத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் சார்பாக

_______

பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்கத்தின் கீழ் இயங்கும் அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகளில் சுத்தம் மற்றும் சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வினை பள்ளி மாணவர்களுக்கு ஏற்படுத்திட "எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி திட்டம்" செயல்படுத்தப்பட்டுவரும் நிலையில் மாணவர்கள் மற்றும் பள்ளி நலன் சார்ந்து பின்வரும் அறிவுரை அனைத்து தலைமையாசிரியர்களுக்கு வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கப்பள்ளி) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளி வளாகத்தையும் விளையாட்டு மைதானத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். பள்ளி வளாகத்திற்குள் முட்புதர்கள் இருப்பின் அவற்றை அகற்றுதல் வேண்டும். குறைந்தது மாதம் இருமுறை உள்ளூர் நிர்வாகத்தின் உதவியுடன் பெரிய அளவில் பள்ளி வளாக தூய்மைப் பணியினை மேற்கொள்ள வேண்டும். பள்ளிக் குடிநீர்த் தொட்டியைச் சுத்தம் செய்து சுகாதாரத்துடன் பராமரித்தல் வேண்டும். தலைமையாசிரியர் அறை, வகுப்பறைகள், நூலக அறை ஆகியவற்றை ஒட்டடை மாசுக்கள் இன்றி தூய்மையாகப் பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பருவ மழைகாலத்திற்கு முன்பாக பள்ளி வகுப்பறைகளின் மேற்கூரையின் மீது படர்ந்துள்ள மரக்கிளைகள் மற்றும் தேங்கியுள்ள இலைகளை அகற்றி மழைநீர் எளிதாக வெளியேற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும்,

பள்ளிக் கட்டிடத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுதல் வேண்டும். பள்ளி வகுப்பறை கதவுகள், சன்னல்கள், தொலைக்காட்சிபெட்டி, மடிக்கணினிகள் போன்றவற்றை தூசுகள் படியாமல் தூய்மையாக பராமரிக்க வேண்டும். மேலும் பள்ளிகளில் உள்ள பழுதடைந்த மேசைகள், நாற்காலிகள், அலமாரிகள் முதலிய தளவாடப் பொருட்களைப் பழுது நீக்கிப் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல் வேண்டும். அவ்வாறு பழுது நீக்க இயலாத நிலையில் இருப்பின் அவை தேவையற்று இடத்தை அடைத்துக் கொண்டு இடையூறாக இருப்பதை தவிர்க்கும் பொருட்டு அவற்றை முறைப்படி பதிவேட்டில் பதிவு செய்து விதிகளின்படி கழிவு நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கு தன் சுத்தம் சுகாதாரம் சார்ந்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படும்பொருட்டு தினசரி காலை வழிபாடு கூட்டத்தில் மாணவர்களிடம், இப்பொருள் சார்ந்து பழமொழிகள், குறுஞ்செய்திகள் அறிவியல் பூர்வமான தகவல்களை பகிர ஆர்வமூட்ட வேண்டும். மாணவர்களுக்குச் சுத்தம் சுகாதாரம் சார்ந்து பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, தனிநடிப்பு போட்டி முதலியவற்றை நடத்திதூய்மையான பள்ளி பற்றி அறியச் செய்தல் வேண்டும். இப்போட்டிகளை அக்டோபர் மாத மன்றச் செயல்பாடுகளுடன் இணைத்து செயல்படுத்தலாம்.

மேலும் இரவு தூங்கும் முன்னரும், காலை கண்விழித்த உடனும், பல்துலக்குதல், சுகாதாரமாக குளித்தல், தூய்மையான உடை அணிதல், விரல் நகங்களை சீராக பராமரித்தல், உணவு உண்ணும் முன்னர் சோப்பினால் நன்கு கைகளை கழுவுதல், சுகாதாரமான உணவுகளை உண்ணுதல் போன்ற தன் சுத்தம் சார்ந்தும் குப்பைத் தொட்டிகளைப் பயன்படுத்ததுதல் மற்றும் சுற்றுப்புறத் தூய்மை பேணுதல் சார்ந்தும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி அவர்களிடம் நற்பழக்கத்தினை ஏற்படுத்த வேண்டும். மேலும், பள்ளி மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டு, பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. பள்ளியிலுள்ள மின்மோட்டார் உள்ளிட்ட மின்சாதனங்களை எக்காரணம் கொண்டும் மாணவர்களை கொண்டு இயக்கக் கூடாது.

பள்ளி வகுப்பறைகள் மற்றும் வளாகங்களில் மின் இணைப்புகள் முறையாக பாதுகாப்பாக பராமரிக்கப்படுதலை உறுதி செய்ய வேண்டும். மின்கம்பிகள் மற்றும் மின் சாதனங்கள் பழுதுபட்டிருப்பின் மின் இணைப்பினை துண்டித்து முறையாக பராமரிக்கும் பணி மேற்கொள்ள வேண்டும்.

2. பள்ளி வளாகத்தில் திறந்த நிலை நீர்நிலைகள் மற்றும் பள்ளங்கள் மாணவர்கள் அணுகாவண்ணம் சுற்றுவேலி அமைத்தல், கிணறு மற்றும் நீர்நிலைத் தொட்டிகளில் மேற்புறம் முழுவதும் மூடிய அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.
3. பள்ளிகளில் முதலுதவி பெட்டி முறையாக பராமரிக்கப்படுவதுடன், மருந்துகள் காலாவதியாகும் முன்னர் புதிய மருந்துகள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.
4. பள்ளி மாணவர்கள் பள்ளி வளாகத்திற்கு அருகில் உள்ள கடைகளில் சுகாதாரமற்ற திண்பண்டங்களை வாங்கி உண்ணக் கூடாது உள்ளிட்ட சுகாதாரம் சார்ந்த நன்னெறிகளை அவ்வப்போது இறை வணக்கக் கூட்டத்தில் தெரிவிப்பதுடன், புகையிலை மற்றும் போதைப்பொருட்களினால் ஏற்படும் சீரழிவுகள் குறித்து அறிவுரைகள் வழங்க வேண்டும்.

மேலும், மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு தொடர்பாக அப்பணியாளர்களை கீழ்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தூய்மையாக இருப்பதை உறுதி செய்தல்.

1. பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் காலை மற்றும் மாலை வழங்கப்படும் சிற்றுண்டி மற்றும் உணவு முற்றிலும் தூய்மையாக சமைக்கபட வேண்டும். சுகாதாரமான பொருட்கள் மட்டுமே சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும்.
2. சமையலுக்கு பயன்படுத்தப்படும் அரிசி, பருப்பு மற்றும் காய்கறிகள் சமைக்கும் முன்னதாக தூய்மையான நீரில் கழுவி சுத்தம் செய்யப்பட வேண்டும்.

3. சமையலுக்குப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் ஒவ்வொரு நாளும் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

4. உணவு தயார் செய்யும் சமையல் கூடம் மிகவும் சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும். எரி பொருட்கள் தேவையற்ற பொருட்கள் குப்பையாக வைத்திருக்கக்கூடாது.

5. சமையலர்/ சமையல் உதவியாளர்கள் தூய்மையான முறையில் சமையல் செய்வதை உறுதிபடுத்த வேண்டும்.

6. மாணவர்கள் உணவு அருந்தும் இடம் சுத்தமாக பராமரிக்கப்படுவதுடன், உணவு அருந்தும் போது பறவைகள், பிற விலங்கினங்கள் உணவுப்பொருட்கள்/உணவு அருந்தும் இடத்திற்கு அருகில் அணுகாமல் இருக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. சத்துணவு திட்டத்தின் கீழ் முட்டை வழங்கப்படும் போது, முட்டை கெடாமல் நல்ல நிலையில் உள்ளது என்பதை உறுதி செய்த பின்னரே சமையலுக்கு பயன்படுத்த வேண்டும்.

8. மதியம் உணவு இடைவேளையில் சத்துணவு உண்ணும் மாணவ, மாணவியர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட வரிசையில் விரைவாக உணவினை பெற்று உணவருந்துவதினை தலைமை ஆசிரியர் கண்காணிக்க வேண்டும்.

9. கொதி நிலையில் உள்ள சாம்பார்/ உணவு வைக்கப்பட்டுள்ள பாத்திரங்களின் அருகில் எக்காரணம் கொண்டும் மாணவர்கள் அணுகாமல் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

10. பள்ளியின் தலைமையாசிரியர் தலைமையில் உதவி தலைமையாசிரியர்/ஆசிரியர்கள் சுழற்சி அடிப்படையில் நாள்தோறும் இப்பணியினை ஆர்வத்துடன் கண்காணிக்க வேண்டும்.
11. மாணவர்கள் உணவு அருந்தும் முன்பாக தங்களின் கைகள் / உணவு அருந்தும் தட்டு / நீர் அருந்தும் டம்ளர் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்த அறிவுரைகள் வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும்.

மேற்குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை தங்கள் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் பின்பற்ற தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கப்பள்ளி) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

04/10/2022.

தொடக்கக் கல்வி இயக்குநர்

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கப்பள்ளி)

**நகல்:** அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.